# எட்டாந்தரப் படவேலை சமூகக்கல்வி

புதிய பாடத்திட்டம்

ஆக்கியோர் :
க. குணராசா B. A. Hons. (Cey.) C. A. S.
கமலா குணராசா, B. A. (Cey.)

*

முதற் பதிப்பு ஜனவரி 1981

*

ஸ்ரீ லங்கா வெளியீடு
காங்கேசன்துறை வீதி : : யாழ்ப்பாணம்.

விலை ரூபா 6-50

# சமூகக்க [illegible] 8

## <u>படவேலைப் பாடத் திட்டம்</u>

**4-00 படவேலை**

**4-10 உலகப்படம்**

4-11 நெல், கோதுமை, சோளம் ஆகியவற்றின் பரம்பல்.

4-12 சமுத்திர நீரோட்டங்களும், மீன்பிடித் தளங்களும்.

இறைச்சிக்காக மாடு, செம்மறி ஆடு வளர்க்கப்படும் பிரதேசங்கள். பாற்பண்ணைப் பிரதேசங்கள்.

தேயிலை, கோப்பி, கொக்கோ விளையும் பிரதேசங்கள்,

4-15 பருத்தி, சணல். நற்சணல், பட்டு உற்பத்தி, செய்யும் பிரதேசங்கள்.

4-16 உலகின் பிரதான நிலக்கரி, பெற்றோலிய வயல்களின் பரம்பல்.

**4-20 இலங்கைப் படம்**

4-21 நிர்வாக மாவட்ட எல்லைகளை வரைந்து மாவட்டங்களைப் பெயரிடுதல்.


4-22 மாவட்டங்களின் தலைப்பட்டினங்களைக் குறிப்பிடுதல்.

**4-30 சமவுயரக் கோட்டுப் பயிற்சி**


4-31 தட்டையான தளத்தில் உயரத்தைக் காட்டுவதற்குக் கைக்கொள்ளப்படும் வழி வகைகள் அறிமுகம்.


4 32 சமவுயரக் கோட்டுப் படங்கள். சமவுயரக் கோட்டுப் படங்களில் பின்வருவனவற்றை இனங்கண்டு கொள்வதற்குப் பயிற்சியளித்தல். கூம்புக்குன்று, பாறைத் தொடர், பீடபூமி (மேட்டு நிலம்), சமவெளி, பள்ளத்தாக்கு. சுவடு, வெளியரும்புப் பாறை, குத்துச் சாய்வு, மென்சாய்வு, குழிவுச் சாய்வு, குவிவுச் சாய்வு, இடவுயரங்சள், திரிகோண கணி[illegible]யங்கள்.

# 4.10. உலகப்படப் பயிற்சி





(குறிப்பு: பாகிஸ்தான் என எழுதப்பட்டிருப்பதை வங்காள தேசம் எனத் திருத்திக்கொள்க)








சோளம்






மீன்பிடித்தொழில்


ஐ. சோ. ச. கு.
ஐக்கிய இராச்சியம்
பிரான்ஸ்
ஐக்கிய அமெரிக்கா
கியூபா
மெச்சிக்கோ
கொலம்பியா
பிரேசில்
இந்தியா
சீனு
மடகஸ்கார்
அவுஸ்திரேலியா
நியூசிலாந்து
ஆடு, மாட்டு வேளாண்மை



ஐ. சோ. ச. கு.
ஐக்கிய இராச்சியம்
ருமேனியா
ஐக்கிய அமெரிக்கா
ஸ்பெயின்
மொறேக்கோ
துருக்கி
அல்ஜீரியா
எகிப்து
இந்தியா
பேரு
பிரேசில்
உருகுவே
ஆர்ஜென்ரீனு
தென்
ஆபிரிக்கக் குடியரசு
அவுஸ்திரேலியா
நியூ
சிலாந்து
செம்மறி கம்பளி



சீனா
யப்பான்
இந்தியா
பாகிஸ்தான்
இலங்கை
ரன்சானியா
சுமாத்திரா
யாவா
மொசாம்பிக்கியு
தேயிலை



மெக்சிக்கோ
கொங்கோ
இந்தியா
இலங்கை
மலாயா
தாய்லாந்து
போர்னியோ
சுமாத்திரா
நியூகினி
யாவா
பிரேசில்
மொசாம்பிக்கியு
றப்பர்



மெக்சிக்கோ
வெனெசுலா
பிரேசில்
கானா
கமரோன்
இலங்கை
பிலிப்பைன்
மடகஸ்கார்
கொக்கோ


மெக்சிக்கோ
குவாட்டமாலா
சல்வடோர்
கொலம்பியா
பிரேசில்
கமரோன்
கொங்கோ
அங்கோலா
இந்தியா
சுமாத்திரா
யாவா
மடகஸ்கார்
கோப்பி


ஐக்கிய அமெரிக்கா
மெச்சிக்கோ
பிரேசில்
ஐ. சோ. ச. கு.
சீனு
பாகிஸ்தான்
எகிப்து
இந்தியா
பாகிஸ்தான்
பருத்தி
சணல்
பருத்தி
சணல்


கனடா
ஐக்கிய அமெரிக்கா
கொலம்பியா
பேரு
பிரேசில்
ஐ. சோ. ச. கு.
குஸ்நெற்ஸ்க்
ரியூலா
காரகண்டா
ஸ்பெயின்
இந்தியா
சான்சி
சென்சி
செக்வான்
சீனு
யப்பான்
கியூசு
அவுஸ்திரேலியா
நிலக்கரி


அல்பேட்டா
கனடா
வயோமிங்
கான்சாஸ்
கலிபோனியா
கெண்டகி
மிசிசிப்பி
விரிகுடாக்கரை
ஐக்கிய அமெரிக்கா
மெச்சிக்கோ
மாறக்கைபோ
வெனிசுலா
கொலம்பியா
பகியா
மெண்டோசா
ஐக்கிய இராச்சியம்
மொரோக்கோ
செக்கண்ட்பாகு
ஐ. சோ. ச. கு.
எம்பா
பொலஸ்ரி
பாகு
கிழக்குக்கஸ்பியன்
பெர்காலுவலி
பாரசீகம்
இந்தியா
சீனு
பர்மா
யப்பான்
போர்னியோ
சுமாத்திரா
எகிப்து
குவைற்
சவுதிஅரேபியா
பெற்றோலியம்


குயிபெக்
அடிரொண்டாக்
லெபனன்
பேமிங்காம்
பிரேசில்
சிலி
அல்ஜீரியா
யப்பான்.
அவுஸ்திரேலியா

உலகப் படப்பயிற்சி : 1.



குறித்துப் பெயரிடுக : 1. ஆசியா, 2. ஐரோப்பா, 3. ஆபிரிக்கா, 4. வட அமெரிக்கா, 5. தென் அமெரிக்கா, 6. அவுஸ்திரேலியா, 7. அத்திலாந்திக் சமுத்திரம், 8. பசுபிக் சமுத்திரம், 9. இந்து சமுத்திரம், 10. இந்தியா, 11. இலங்கை, 12. யப்பான், 13. பிரித்தானிய தீவுகள் 14. ஐஸ்லாந்து, 15. றொக்கிமலை, 16. அமேசன் நதி, 17. மத்திய கோடு, 18. சகாராப் பாலைவனம், 18. டவுன்ஸ் புல்வெளி, 20. நைல் நதி,

உலகப் படப்பயிற்சி : 2.



குறித்துப் பெயரிடுக : உலகில் நெல் விளையும் பிரதான நாடுகளைப் பச்சை நிறத்தால் குறித்து, அந்நாடுகளின் பெயர்களை எழுதுக.
( இந்தியா, இலங்கை, வங்காள தேசம், சீனு, தாய்லாந்து, யப்பான், இந்தோனேசியா )

உலகப் படப்பயிற்சி : 3.



குறித்துப் பெயரிடுக : 1. பின் வரும் கோதுமை விளையும் பிரதேசங்களைக் குறித்துப் பெயரிடுக. (அ) ஆசெந்தீனா (ஆ) ஐக்கிய சோவியத் சமவுடைமைக் குடியரசு (ஈ) ஐக்கிய அமெரிக்கா (உ) அவுஸ்திரேலியா (ஊ) இந்தியா (எ) சீனா (ஏ) கனடா (ஐ) ஐக்கியராச்சியம்

## உலகப் படப்பயிற்சி : 4.



குறித்துப் பெயரிடுக : (1) ஆசியாவில் நெல் விளையும் இரண்டு பிரதான நாடுகள் (2) தென் அமெரிக்காவில் கோதுமை விளைவிக்கும் பிரதான நாடு ஒன்று. (3) வட அமெரிக்காவில் சோளம் செய்கை பண்ணப்படும் பிரதான நாடு (4) ஆபிரிக்காவில் சோளம் அதிகம் செய்கை பண்ணப்படும் ஒரு நாடு (5) எகிப்து, யப்பான், மடகாஸ்கார், சில்லி, யாவா,

## உலகப் படப்பயிற்சி : 5.



குறித்துப் பெயரிடுக : (1) வடமேல் அத்திலாந்திக் மீன் பண்ணைகள் (2) யப்பானிய மீன் பண்ணைகள் (3) வடகடல் மீன் பண்ணைகள் (4) இலங்கை மீன் பிடிக்கும் நீர்ப்பரப்பு (5) உலகில் செம்மறி ஆடுகள் அதிகமாக வளர்க்கும் ஒரு நாடு (6) கம்பளி ஏற்றுமதி செய்யும் ஒரு நாடு (7) டென்மார்க் ஐக்கிய இராச்சியம், கொலம்பியா, பிறேசில், அல்ஜீரியா, நியூசிலாந்து.



குறித்துப் பெயரிடுக : (1) தேயிலை செய்கைபண்ணப்படும் பிரதான நாடுகள் இரண்டைச் சிகப்பு நிறத்தால் குறித்துப் பெயரிடுக. (2) தென்அமெரிக்காவில் றப்பர் உற்பத்தி செய்யும் பிரதான நாடு ஒன்றைப் பச்சை நிறத்தால் குறித்துப் பெயரிடுக (3) ஆபிரிக்காவில் கொக்கோ பயிரிடும் நாடுகள் (4) இந்தோனேசியாவில் கோப்பி பயிரிடும் இரண்டு நாடுகள் ( சுமாத்திரா, யாவா )

## உலகப் படப்பயிற்சி : 7.



குறித்துப் பெயரிடுக : *(1)* உலகில் பருத்தி பயிரிடப்படும் மூன்று பிரதான நாடுகளைக் குறித்துப் பெயரிடுக. (2) உலகில் சணல் பயிரிடும் பிரதான நாடு ( வங்காள தேசம் ) *(3)* சீனாவின் நிலக்கரி வயல்கள். ஐக்கிய அமெரிக்காவின் நிலக்கரி வயல்கள். (5) மத்திய கிழக்கு நாடுகளில் பெற்ரோலிய வயல்கள். (6) சோவியத் சமவுடமைக் குடியரசின் இரும்புத்தாது வயல்கள்.


உலகப் படப்பயிற்சி : 8.



குறித்துப் பெயரிடுக : (1) ஆசியாவில் நெல் பயிரிடப்படும் ஒரு பிரதான நாடு (2) ஆசெந்தீனக் கோதுமைப் பிரதேசம். (3) மலாயாவில் றப்பர் பெருந் தோட்டங்கள். (4) பிறேசில் கோப்பித் தோட்டங்கள் (5) ஐக்கிய அமெரிக்காவின் பருத்திப் பிரதேசம். (6) வடகீழ்பசுபிக் மீன்பண்ணைகள். (7) அவுஸ்திரேலியாவில் செம்மறி வளர்ப்புப்பிரதேசங்கள். (8) பின்வரும் பெற்ரோலிய வயல்கள் : வெனசுவெலா, பாகு, குவைத். (9) பின்வரும் நிலக்கரி வயல்கள் : அப்பிலாச்சியன், சைலீசியா, நியூகாசில்.


# 4. 20. இலங்கைப்படப் பயிற்சி






இன்று வவுனியா மாவட்டம் (i) வவுனியா, (ii) முல்லைத்தீவு என இரண்டாகவும்; கொழும்பு மாவட்டம் (i) கம்பகா, கொழும்பு என இரண்டாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

## இலங்கையின் புதிய மாவட்டப்பிரிவுகள்





## இலங்கைப் படப்பயிற்சி : 1.





மேலேயுள்ள படத்தில் காணப்படும் இலக்கங்களுக்குரிய பெயர்களை உரிய இடங்களில் எழுதுக.

## இலங்கைப் படப்பயிற்சி : 2.



குறித்துப் பெயரிடுக : (1) யாழ்ப்பாண மாவட்டம், (2) திருகோணமலை மாவட்டம், (3) முல்லைத்தீவு மாவட்டம், (4) வவுனியா மாவட்டம், (5) மன்னார் மாவட்டம், (6) மட்டக்களப்பு மாவட்டம், (7) கொழும்பு மாவட்டம் (8) கண்டி மாவட்டம், (9) மாத்தறை மாவட்டம், (10) அம்பாந்தோட்டை மாவட்டம்.

இலங்கைப் படப் பயிற்சி : 3.




குறித்துப் பெயரிடுக. (1) யாழ்ப்பாணம், (2) வவுனியா, (3) மன்னர், (4) முல்லைத்தீவு, (5) திருகோணமலை, (6) அநுராதபுரம், (7) பொலநறுவா, (8) புத்தளம், (9) குருநாகல், (10) மாத்தளை, (11) மட்டக்களப்பு, (12) வதுளை, (13) கண்டி, (14) கேகாலை, (15) கொழும்பு, (16) களுத்துறை (17) இரத்தினபுரி; (18) காலி, (19) நுவரெலியா, (19) மாத்தறை.

# 4. 30 சமவுயரக் கோட்டுப் பயிற்சி

## சமவுயரக் கோடு என்றல் என்ன ?


உயர்நிலங்கள், மேட்டு நிலங்கள், தாள் நிலங்கள் என்பன ஒவ்வொரு கண்டத்திலும், ஒவ்வொரு பிரதேசத்திலும் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் தட்டையான தாளில் அமைத்துக் காட்டுவது மிக அத்தியாவசியமாகவுளது. ஒரு பிரதேசத்தின் தரைத் தோற்றத்தைப் பக்கப் பார்வையாக அமைத்துக் காட்டில் அதனல் அவ்வளவு தூரம் பயனில்லே. மிக உயரத்தினின்று ஒரு பறவையின் கண்களினூடாக ஒரு பிரதேசத்தை நோக்கும்போது




படம் : A ( அ ) ஒரு மலேத்தொடரின் பக்கத் தோற்றம்
( ஆ ) அம் மலேத்தொடரின் சமவுயரக் கோட்டுத் தோற்றம். ( ஜீ. ஏ. யேமன் என்பாரது படத்தைத் தழுவியது )

எத்தகைய காட்சி தென்படுமோ அதே போன்று அப்படம் அமைவதாக இருக்க வேண்டும். எனவே, ஒரு பிரதேசத்தின் ஏற்ற வேறுபாடுகளேத் தட்டையான தாளில் குத்தான பார்வையில் அமைத்துக் காட்டப் பயன்படுத்தப்படும் படவரைகலையையே சமவுயரக்கோட்டு முறை என்பர்.

கடல் மட்டத்திற்கு மேல், ஒத்த உயரங்களே இணைத்து வரையப்படும் கோடுகளே சமவுயரக் கோடுகளாம். எந்த ஒரு பிரதேசத்தை எடுத்துக் கொண்டாலும் பல்வேறு அளவினதாய் அமைந்த ஒத்த உயரங்கள் இருந்தே தீரும். உயரமான ஒரு மலேத்தொடரை எடுத்துக் கொள்வோம். படம் A-ல் அம்மலேத் தொடரின் பக்கப் பார்வை முதலில் காட்டப்பட்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 400 அடி உயரமான இம்மலேத்தொடரின் ஒவ்வொரு பகுதியிலும் முறையே 0, 100, 200, 300, 400 எனும் அடிகள் உயரமான இடங்கள் அமைந்து இருக்கின்றன. உயரத்தில் ஒத்த அவ்விடங்களே இணேத்துக் கோடுகள் இடப்பட்டுள்ளன. படம் அ-அதனேயே சுட்டுகின்றது. அதனல் பக்கத் தோற்றத்தைக் காட்டுகின்ற படம் அ-இன் மறுபக்கத் தோற்றம் நமக்குத் தெரியவில்லே. அதனேயும் தெரியத்தக்கதாக வரையும்போது உருவாகுவதே படம் ஆ-ஆகும், இதுவே சமயுயரக் கோட்டுத் தோற்றமாகும், படம் ஆ-இல் ஒத்த உயரங்கள் ஒவ்வொன்றும் இணேந்து வரையப்பட்டு, இலக்கப் பெயருமிடப்பட்டுள்ளது.




படம் : B மலேத்தொடரின் குறுக்குப் பக்கப் பார்வையும் சமவுயரக்கோட்டுத் தோற்றமும்.


படம் : B-இல் அதே மலேத்தொடரின் தோற்றம் குறுக்குப்பக்கப்பார்வையாக முதலில் வரையப்பட்டுள்ளது. அக் குறுக்குப் பக்கப்பார்வை எவ்வாறு சமவுயரக் கோட்டுத் தோற்றமாக மாறுகின்றது என்பதையும் அப்படம் விளக்குகின்றது. படம் A-ஐயும் B-ஐயும் சரிவரப் புரிந்து கொண்ட பின், பின் தொடர்க.

## சமவுயரக் கோட்டு வடிவங்கள்

ஒரு படத்தில் சமவுயரக்கோடுகள் அமைந்துள்ள ஒழுங்கினைக் கொண்டு, அவை சுட்டுகின்ற நிலவுருவங்களே எளிதில் அறிந்து கொள்ளலாம். சாய்வுகள், பள்ளத்தாக்குகள், குன்றுகள் மேட்டு நிலங்கள் என்ற இன்னோன்ன நிலவுருவங்கள் சமவுயரக்கோடுகளின் அமைப்பில் காட்டப்படும் போது, அவை ஒவ்வொன்றும், ஒவ்வொரு சமவுயரக் கோட்டு வடிவத்தினைக் கொண்டனவாக அமைகின்றன.

## சாய்வுகள்

ஒரு சமவுயரக்கோட்டினுள் இன்னொன்றாக சமவுயரக் கோடுகள் அமையும்போது, அவை நாற்புறமும் அமைந்த சாய்வுகளைக் குறிப்பன வாக அமைகின்றன. சில பகுதிச் சாய்வுகள் படிப்படியாக உயர்ந்தனவாயும், சில பகுதிச் சாய்வுகள் திடீரென உயர்வனவாயும் காணப் படுகின்றன.



படம்: D

மென் சாய்வு

படிப்படியாக உயர்கின்ற சாய்வினையே மென் என்பர். இதில் சமவுயரக் கோடுகள் ஐதாகக அமைந்திருக்கும். சமவுயரக் கோடுகளிடையே நெருக்கம் காணப்படாது. மேலும் ஐதாகக் காணப்படும் சமவுயரக் கோடுகளின் இடை வெளிகள் யாவும் ஏறத்தாழ ஒரேயளவினதா யும் காணப்படும்.

குத்துச் சாய்வு


திடீரென உயர்கின்ற சாய்வினையே குத்துச் சாய்வு என்பர். இதில் சமவுயரக் கோடுகள் நெருக்கமாக அமைந்திருக்கும். சமவுயரக்கோடு களின் நெருக்கம் சாய்வின் திடீர் உயர்வைக் குறிக்கும். படம் D-யில்இதனை அவதானிக்கலாம். மென் சாய்வில் சமவுயரக்கோடுகளின் ஐதான அமைப்பையும் குத்துச்சாய்வில் சமவுயரக்கோடு களின் நெருக்கமான அமைப்பையும் அவதானிக் கலாம்

குழிவுச்சாய்வு

முதலிற் படிப்படியாக உயர்ந்து, பின் திடீ ரென உயர்ந்து, குழிவு வளைவாகக் காணப் படும் சாய்வு குழிவுச் சாய்வு எனப்படும். இதில் தாழ்சமவுயரக் கோடுகள் ஐதாகவும், உயர் சமவுயரக் கோடுகள் நெருக்கமாகவும் அமைந் திருக்கும்.

## குவிவுச் சாய்வு


முதலிற் திடீரென உயர்ந்தும் பின் படிப் படியாக உயர்ந்தும் குவிந்து வளைவாகக் காணப் படும் சாய்வு, குவிச்சாய்வு எனவழங்கப்படும். இதில் தாழ் சமவுயரக் கோடுகள் நெருக்கமா கவும், உயர் சமவுயரக் கோடுகள் ஐதாகவும் காணப்படும்.



படம் G. குவிவுச்சாய்வு

## பள்ளத்தாக்குகள்

சமவுயரக் கோட்டுப் படங்களிலிருந்து பள் ளத்தாக்குகளைக் கண்டு பிடிப்பது இலகுவெனி னும், தவறுகள் இதிலேயே பெரிதும் நிகழ்கின் கின்றன. பள்ளத்தாக்குகளைச் சுட்டுகின்ற சமவு யரக்கோடுகள் எப்போதும் உயர்நிலத்தை நோக்கி V வடிவில் வளைந்தமைந்திருப்பனவாம். அவை சுவடுகள் எனும் நிலவுறுப்பாக அமைந்துவிடும் படம் H ஐ அவதானிப்பதோடு, படம் K-ஐயும். கவனித்து நோக்கில் பள்ளத்தாக்குகளைக் குறிக் கும்போது தவறுகள் எழா.



படம். H. பள்ளத்தாக்கு

## குன்றுகள்

### 1. சிறுகுன்று

இலங்கை ஓரங்குல இடவிளக்கவியற் படத்தில், சிறுகுன்றுகள், ஏறத்தாழ ½ மைல் நீளத்திற்குட்பட்டனவாகக் காணப்படும். சமவுயரக் கோட்டு வடிவத்தில் அவை படம் J இல் காட்டியவாறு அமைந்திருக்கும்.

### 2. நீள் குன்று


சிறுகுன்றிலும் பார்க்க நீளமானவை நீள் குன்றுகள் எனப்படுகின்றன. அவை ஏறத்தாழ 1—2½ மைல்கள் நீளமானவையாகக் காணப்படும். ஒன்றிற்கு மேற்பட்ட உச்சிகளைக் கொண்டனவாக இருக்கும்: (படம்: J.)

### 3. பாறைத்தொடர்


நீள்குன்றிலும் பார்க்க நீளமானவை பாறைத் தொடர்களாகும். இவை 3—8 மைல்கள் வரை நீளமானவையாகக் காணப்படும். 2—3 மைல்கள் அகலமானவையாகவும் காணப்படும், பல சிகரங்களை இப்பாறைத் தொடர்கள் கொண்டிருக்கும். (படம்: J)

### 4. கூர்புக் குன்றம்


கூம்பு வடிவினதாய் அமைந்திருக்கும் ஒரு குன்றே கூம்புக் குன்றம் ஆகும். இதில் சமவுயரக்கோடுகள் பெரிதும் ஒரு மையத்தெழும் வட்டங்களை ஒத்தன. மையத்தை நோக்கி நிலம் உயர்ந்தமைந்திருக்கும்.



படம்: I கூம்புக் குன்றம்




படம்: ஒத்தகரை, ஒவ்வாக்கரை, குடா, சிறுகுடா, முனை என்பன





படம் : J சிறுகுன்று, நீள் குன்று, பாறைத்தொடர்

### மேட்டு நிலம்

உயர் நிலமொன்றின் உச்சியில் அகன்று தட்டையாக அமைந்த ஒரு பரப்பே மேட்டு நிலம் எனப்படும். இதில் சமவுயரக் கோடுகள் உயர் நிலத்தைக் காட்ட அமைந்திருக்கும். ஆனால், உச்சியில் சமவுயரக் கோடுகள் காணப்படா.

### சுவடு

ஒரு உயர் நிலத்தினின்றும் அல்லது பாறைத் தொடரினின்றும் வெளியே நீட்டிக்கொண்டு காணப்படும் உறுப்பே சுவடு ஆகும். இதில் பாறைத்தொடரின் ஒரு பகுதி புடைத்து நிற்கும். இதில் சமஉயரக்கோடுகள் தாழ்நிலத்தை நோக்கி வளைந்து அமைந்திருக்கும்.




படம் : K மேட்டு நிலம், சுவடு, பள்ளத்தாக்கு, வெளிக்கிடை என்பன

## வெளிக்கிடை

பழைய பாறைகளினுல் சூழப்பட்ட புதிய பாறைத் திணிவொன்றே வெளிக்கிடை எனப்படும். இது பழைய பாறைத் தொடரினின்றும் பிரிவுற்று அமைந்திருக்கும். இதில் சமவுயரக்கோடுகள், அருகமைந்த உயர்நிலத்தோடு இணையாது, தனித்து கூம்பு வடிவிலோ வேறு அத்தகைய் சிறு வடிவிலோ அமைந்து காணப்படும். (படம் : E)

## வழக்கக் குறியீடுகள்

ஒரு சமவுயரக் கோட்டுப் படத்தில் பௌதிக நிலவுறுப்புகளோடு, பண்பாட்டு உறுப்புகளையும் காட்டல் அவசியம். ஒரு பிரதேசத்தின் தரையுயர்ச்சி வேற்றுமைகளையும், நதிகளின் போக்குகளையும் காட்டுவதோடு நிலப்பயன்பாடு குடியிருப்புகள், போக்கு வரத்து வசதிகள் என்பனவற்றையும் காட்டல் வேண்டும். இவற்றை எல்லாம் படத்தில் அமைத்துக் காட்டுவதற்கு படவரைகலையியல் அறிஞர்கள் பல வழக்கக் குறிகளையும், அடையாளங்களையும், நிறங்களையும் பயன்படுத்தி வருகின்றனர்.

சமவுயரக் கோடுகள் தவிட்டு நிறத்தால் (கபில நிறம் - பிறவுண்) வரையப்படல் வேண்டும். நதி நீல நிறத்தால் வரையப்படும். பிரதான வீதி சிவப்பு நிறத்தாலும், சிறு வீதி தவிட்டு நிறத்தாலும், நடை பாதை முறிகோடுகளாகவும் வரையப்படல் வேண்டும். நெல் விளைநிலம் பச்சை நிறத்தால் காட்டப்படும். குளம், நீர்ப்பாய்ச்சல் கால்வாய் என்பன நீல நிறத்தால் காட்டப்படும்.


(பெருந்தோட்டப் பயிர்கள் கபில நிறத்தினுள் அப்பயிரின் முதல் எழுத்துக்களிட்டுக் காண்பிக்கப் படும்)

| | |
|---|---|
| T | தேயிலை |
| R | றப்பர் |
| C | தென்னை |
| CIN | கறுவா |
| COA | கொக்கோ |
| CIT | சித்திரநெல்ல |
| TOB | புகையிலை |
| G | கிராமத்தோட்டம் |

- +--+--+--+--+-- மாகாண எல்லை
- +·+·+·+·+·+·+ மாவட்ட எல்லை
- உதவி அரசாங்க அதிபர் பிரிவு எல்லை
- கோறளை எல்லை
- மாநகர, பட்டினசபை எல்லை
- † கிறித்தவ ஆலயம்
- புத்தகோயில்
- இந்துக் கோயில்
- பள்ளிவாசல்
- கலங்கரை விளக்கம்
- பூங்கா
- வெளியரும்புப்பாறை
- நெல் வயல் (பச்சை நிறம்)
- பாழடைந்த நெல் வயல்

| | |
|---|---|
| R.H | வாடி வீடு |
| P | தபாற்கந்தோர் |
| P | உபதபாற்கந்தோர் |
| P.S | பொலிஸ் நிலையம் |
| C B | அரசாங்க மாளிகை |
| PW | பொ. வே. ப. (P.W.D) |
| H | ஆசுப்பத்திரி |
| D | வைத்தியசாலை |
| B | பங்களா |
| F | தொழிற்சாலை |
| S | பாடசாலை |
| Amb | அம்பலம் (மடம்) |
| R.C | கிராமக்கோடு |
| ▬ | நிரந்தரக் கட்டிடம் (குடியிருப்பு) |

**சமவுயரக் கோட்டுப் பயிற்சி: 1.**




அ) 1. 200 அடிக்கு மேற்பட்ட இடங்களை நிறந்தீட்டுக.
2. வீதியைச் சிகப்பு நிறத்தால் வரைக.
3. குளத்திற்கு நீலநிறந் தீட்டுக.
4. கோயிலையும் பாடசாலையையும் இணைத்து ஒரு வீதி கீறுக.
5. புள்ளிக் கோட்டினுல் காட்டப்பட்டுள்ள ஆற்றை நீல நிறத்தால் கீறுக.

ஆ) 1. 'அ' என்பது ஒரு கிராமம். அக்கிராமத்திற்கு எத்திசையில் மேல்வருவன அமைந்துள்ளன.
(அ) கோயில் ______________
(ஆ) மரம் ______________
(இ) குளம் ______________
(ஈ) பாடசாலை ______________
(உ) நதி ______________


2. நதி எங்கு உற்பத்தியாகி எத்திசையாகப் பாய்கிறது?

______________________________

3. வீதி எத்திசையிலிருந்து எத்திசை வரை அமைந்துள்ளது?

______________________________

சமவுயரக் கோட்டுப் பயிற்சி : 2.




அ) 1. 400 அடிக்கு மேற்பட்ட இடங்களை மஞ்சள் நிறத்தால் குறிக்க.

2. இப்பிரதேசத்தில் எத்தனை குன்றுகள் உள்ளன? ........................

3. மிகவுயர்ந்த குன்றின் உயரம் யாது? ..................

4. படத்தில் காட்டப்பட்டுள்ள பிரதான வீதியைச் சிகப்பு நிறத்தால் கீறுக.

5. புள்ளிக் கோட்டினுல் காட்டப்பட்டுள்ள நதியை நீல நிறத்தால் வரைக.


ஆ) 1. 'ஆ' என்ற இடத்திலிருந்து பிரதான வீதியின் மத்தியில் (▪) வந்து சேரும் சிறு வீதியை கபிலநிறத்தால் (பிறவுண்) வரைக.

2. படத்தில் பௌத்தகோயில் ஒன்றுள்ளது. அதிலிருந்து பிரதான வீதிக்குச் சிறு வீதி ஒன்றைக் கீறுக.

3. பௌத்த கோயிலுக்கு எத்திசையில் 'ஆ' என்னும் இடம் உள்ளது?

..............................................

சமயுயரக் கோட்டுப் பயிற்சி : 3.




அ ) 1. 800 அடிக்கு மேற்பட்ட இடங்களை நிறந்தீட்டிக் காட்டுக.

2. இப்பிரதேசத்தில் நீண்ட பாறைத்தொடர் ஒன்றுள்ளது. அதன்மீது பாறைத் தொடர் என்று எழுதுக.

3. இப்பிரதேசத்தில் எத்தனை குன்றுகள் உள்ளன ? ..... ...... ...

4. 'இ' என்ற இடத்திற்கு அருகில் 800 அடி உயரமான குன்று ஒன்றை வரைக.

5. நெல் வயலுக்குப் பச்சை நிறந்தீட்டுக.


6. பிரதான நதியை உரிய நிறத்தால் வரைக.

ஆ ) 1. அ—ஆ என்னும் இடங்களை இணைத்துப் பிரதான வீதி ஒன்றை வரைக.

2. ஆ—இ என்னும் இடங்களை இணைத்துச் சிறு வீதி ஒன்றை வரைக.

3. இப்பிரதேசத்தில் நெல் செய்கை பண்ணக்கூடிய வேறொரு இடத்தைப் பச்சை நிறந்தீட்டிக் காட்டுக.

சமவுயரக் கோட்டுப் பயிற்சி : 4.




( அ ) 1. 1000 அடிக்கு மேற்பட்ட இடங்களை நிறந்தீட்டுக.

2. இப்பிரதேசத்தின் மிகக்கூடிய உயரம் யாது ? ........................

3. இப்பிரதேசத்தில் எத்தனை நீள்குன்றுகள் உள்ளன ? ....................

4. இப்பிரதேசத்தில் எப்பகுதியில் சிறுகுன்று ஒன்று காணப்படுகின்றது ?

........................................

5, வீதியைச் சிகப்பு நிறத்தால் வரைக.

6. அ–ஆ எனும் இடங்களைச் சிறு வீதியால் வரைக.

(ஆ) 1. நீள் குன்றுகளுக்கு இடையில், பிரதான வீதிக்கு அருகே செல்லும் நதியைக் கீறுக.

2. இப்பிரதேசத்திலுள்ள மரத்திற்கு எத்திசையில் மேல்வருவன உள்ளன ?

(அ) புத்தகோயில் ................................


(ஆ) அ ................................

(இ) ஆ ................................

(ஈ) வீதி ................................

(உ) நீள்குன்று ................................

சமவுயரக் கோட்டுப் பயிற்சி : 5.




தரப்பட்ட சமவுயரக் கோட்டுப் படத்தில் பின் வரும் பயிற்சிகளைச் செய்க.


( அ ) 500 அடிக்கு மேற்பட்ட பகுதிகளை நிழற்றுக.

( ஆ ) குன்று, சுவடு, மென்சாய்வு எனும் சொற்களை ஏற்றவிடத்துக் குறித்துக் காட்டுக.

( இ ) பிரதான நதியுடன் A-என்ற இடத்தில் வந்து சேரும் கிளையாற்றைக் கீறுக.

( ஈ ) A-B என்ற கிராமங்களைச் சாதாரண வீதி ஒன்றால் இணைக்குக.

சமவுயரக் கோட்டுப் பயிற்சி : 6.




( அ ) 400 அடிக்கு மேற்பட்ட இடங்களை நிறம் தீட்டுக.

( ஆ ) சுவடு, பாறைத்தொடர், மென்சாய்வு என்னும் சொற்களை ஏற்ற ஒவ்வோரிடத்தில் எழுதுக.

( இ ) பிரதான ஆற்றின் ஒருபகுதி காட்டப் ட்டுள்ளது. மிகுதியைச் சரியாக வரைக.

( ஈ ) A - B எனும் கிராமங்களைப் பிரதான வீதி ஒன்றுல் இணைக்க.

) உ ) நெல் பயிரிடக்கூடிய ஒரு பகுதியைக் குறித்துக் காட்டுக.

**சமவுயரக் கோட்டுப் பயிற்சி : 7.**


(அ) 400 அடிக்கு மேற்பட்ட இடங்களை நிறந்தீட்டுக.

(ஆ) பாறைத்தொடர், மென்சாய்வு, குத்துச்சாய்வு எனும் சொற்களை ஏற்ற ஒவ்வோரிடத்தில் எழுதுக.


(இ) பிரதான நதி காட்டப்பட்டுள்ளது. A-என்ற இடத்தில் வந்து சேரும் கிளையாற்றைக் கீறுக.

(ஈ) C - D என்னும் இடங்களை இணைக்கும் பிரதான வீதியை வரைக.
நதியைக் கடக்குமிடத்தில் பாலமிடுக.
B-A. எனுமிடங்களைச் சிறு வீதி ஒன்றால் இணைக்குக.

(உ) நெல் வயல்கள் இரண்டினைப் பச்சை நிறந்தால் வரைந்து காட்டுக.



**சமவுயரக் கோட்டுப் பயிற்சி: 8.**




பின் வருவனவற்றில் சரியான விடையின் கீழ்க்கீறிடுக.

( அ ) 1. படத்தில் 1 என இலக்கமிடப்பட்டிருப்பது :
சிறுகுன்று / பாறைத்தொடர் / கூம்புக்குன்று ஆகும்.

2. படத்தில் கூம்புக்குன்று :
6 என / 1 என / 2 என இலக்கமிடப்பட்டுள்ளது.

3. படத்தில் பாலத்தைக் குறிக்கும் இலக்கம் :
6 /3 / 4 / 5 ஆகும்

( ஆ ) கடலையும், நதியையும் நீல நிறத்தால் நிழற்றுக.

( இ ) வீதிகளைச் சிகப்பு நிறத்தால் நிழற்றுக.

## சமவுயரக்கோட்டுப் பயிற்சி: [illegible]


(அ) 2500 அடிக்கு மேற்பட்ட பகுதிகளை நிறந் [illegible].

(ஆ) சுவடு, மென்சாயவு, குத்துச்சாய்வு, ப [illegible] டர் எனும் சொற்களை ஏற்ற ஒவ்வோர் இடத்தில் எழுதுக.

(இ) பிரதான நதியைக் கீறுக.

(ஈ) A - யிலிருந்து B - க்கு பிரதான ஒரு [illegible] வரைக.

(உ) X - லிருந்து பார்த்தால் Y - கண்ணுக்குத் தெரியுமா?



## ஏனைய சமூகக்கல்வி நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 6 | 1. | சமூகக்கல்வி - 6 | 5-50 |
| | 2. | சமூகக்கல்விப் பயிற்சிகள் ( வினாவிடை ) | 4-80 |
| | 3. | ஆறாந்தரப் படவேலை - சமூகக்கல்வி | 3-50 |
| 7 | 1. | சமூகக்கல்வி 7. | 4-60 |
| | 2. | சமூகக்கல்விப் பயிற்சிகள் ( வினாவிடை ) | 6-00 |
| | 3. | ஏழாந்தரப் படவேலை - சமூகக்கல்வி | 5-40 |
| 8 | 1. | சமூகக்கல்வி - 8. ( முதலாம் பருவம் ) | 4-80 |
| | 2. | சமூகக்கல்விப் பயிற்சிகள் (வினாவிடை) | (அச்சில்) |
| | 3. | எட்டாந்தரப் படவேலை - சமூகக்கல்வி | 6-50 |
| 9 10 | 1. | சமூகக்கல்வி - 9. | 9-50 |
| | 2. | புதிய சமூகக்கல்வி - 10. | 12-00 |
| | 3. | சமூகக்கல்விப் பயிற்சிகள் ( வினாவிடை ) | 8-40 |
| | 4. | சமூகக்கல்விப் படவேலைப் பயிற்சிகள் | 12-00 |

— விபரங்களுக்கு —

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

காங்கேசன்துறை வீதி : யாழ்ப்பாணம்